சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்– திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப.,

செ. மு. ஆணை எண். அநிபி.8/71463/ 2023 நாள். 04.06.2024

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. கே. பிரதீப், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)–ஆக பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:–
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அநிபி6/80928/2020, நாள். 23.02.2023.
2. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி3/4438/2023, நாள். 16.03.2023.
3. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களின் கடித எண். அபபி3/9971/2023, நாள். 06.6.2023.
4. அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டு (க்யூ1)த் துறை, நாள். 08.03.2023.

......

ஆணை:–

சென்னை–32, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் தேனி, வேளாண்மை துணை இயக்குநர்(வே.வ) அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வந்தபோது 22.12.2017 அன்று பணிக்காலத்தில் காலமான அமரர் ம.கேசவமூர்த்தி அவர்களின் குடும்பத்தின் மிகவும் வறிய நிலையைப் போக்க அன்னாரின் வாரிசுதாரர் / மகன் திரு. கே. பிரதீப் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–71900 (Level–8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)–ஆகப் பணி நியமனம் செய்து, பார்வை (1)–இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்கநருக்க ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து பார்வை (2)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி திரு. கே. பிரதீப் அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 24.03.2023 முற்பகல் தேனி, தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து கொண்டார்.

(தொடர்ச்சி...)

Scanned with OKEN Scanner

3) பார்வை (4)-இல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தேனி, தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 24.03.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு. கே. பிரதீப் அவர்களின் பணியினை இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 24.03.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) மேற்படி, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்தும், தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- பா. முருகேஷ்
வேளாண்மை இயக்குநர்

✓பெறுநர்

திரு. கே. பிரதீப்,
இளநிலை உதவியாளர் (பிணையமற்றது),
தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்,
தேனி.

**வழி மற்றும் நகல் :-**இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.

திரு. கே. பிரதீப், இளநிலை உதவியாளர் (பி.அ) இன் இணைப்பில் குறிப்பிட்ட 1 முதல் 26 வரையிலான அசல் ஆவணங்கள், தனியரின் பணிப்பதிவேடு - 1 பவுண்ட், பதிவுறுத்தாள் - 1 எண் மற்றும் இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேடு - 1 பவுண்ட் வால்யூம் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை தனியே பட்டியலிட்டு அளிக்கக் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தனியரின் பணிவரன்முறை செய்த விவரம் பணிப்பதிவேட்டில் பதிந்தமைக்கான சான்றும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நகல்:** தோட்டக்கலை துணை இயக்குநர், தேனி.
**நகல்:** 'அபபி' பிரிவு, இவ்வலுவலகம்.
**நகல்:** அநிபி-8 இருப்புக்கோப்பு.

//உத்தரவுப்படி//

கண்காணிப்பாளர். 07/06/24